தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட வேண்டும்"

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1975) நிறை ..ன்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1975) நிறை வேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1975.)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர வர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

@ 273—275 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1975 அக்டோபர் 28] [திரு. செ. மாதவன்]

சட்டமன்ற உறுப்பினர்கள் ஏற்கெனவே பெற உரிமையுள்ள வழக்கமான பயணப்படி தவிர, ஒரு நிதியாண்டில் இந்திய ரயில்வேக்கள் எதிலும் மொத்தம் 10,000 கிலோ மீட்டர் தொலைவிற்கு முதல் வகுப்பில் பயணம் செய்ய அவர்களுக்கு இரயில்வே பயணச் சீட்டுகள் கொடுக்கப்படலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது.

சட்டமன்ற உறுப்பினர்கள் தாங்கள் தொலைபேசி வசதிகளைப் பெற்றிருந்தாலும் அல்லது பெற்றிராவிட்டாலும் அவர்களுக்கு 1975 ஏப்ரல் 1 ஆம் நாளிலிருந்து மாதமொன்றுக்கு ரூபாய் 100 தொலைபேசிப் படி வழங்கப்படலாமென்றும் அரசு முடிவு செய்துள்ளது.

1968 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் நாளுக்கு முன்னரல்லாத ஒரு நாளிலிருந்து செயல் வடிவம் கொடுக்க இயலும் வகையில், தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14-வது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் கீழ் விதி ஒன்று இயற்றப்படலாம். அமைச்சர்கள், பேரவைத் தலைவர் முதலியோருக்குக் கொடுக்கப்பட்ட அரசு மோட்டார் வண்டிகளைப் பயன்படுத்துவதற்கும் பராமரிப்பதற்குமான விதிகளில் சில திருத்தங்கள் வெளியிடப்பட்டன. இவற்றிற்கு 1—11—1967-லிருந்தே செயல் வடிவம் கொடுக்கப்பட்டது.

மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்கும் பொருட்டு, 1967 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாளிலிருந்தே செயல்வடிவம் பெறும் வகையில் விதிகள் இயற்றுவதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் அளித்து மேற்சொன்ன 14-வது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவைத் திருத்த வேண்டியுள்ளது.

அவையின் முன் வைக்கப்பட்டுள்ள இச்சட்ட முன்வடிவில் மேற்கூறியதற்கான விதித் துறைகள் உள்ளன. இதை ஏற்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. ஜி. சுவாமிநாதன் : மேலவைத் துணைத் தலைவரவர்களே, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவின்மீது ஓரிரு வார்த்தைகள் பாராட்டிப் பேச விரும்புகிறேன். இந்தச் சட்ட மன்ற மேலவையில் உறுப்பினராக நான் வந்தபோது, 250 ரூபாய் என்ற அளவிலே சம்பளம் கொடுக்கப்பட்டது. அதற்குமேல், அந்தச் சம்பளம் மேலும் 200 ரூபாய் அளவுக்கு அதிகப் படுத்தப்பட்டுள்ளது. நான் இதைக் குறிப்பாகச் சொல்வதற்குக் காரணம் இருக்கிறது. அரசியலிலே இருப்பவர்களுக்கு—அதுவும் சட்ட மன்றத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு, பழைய காலத்தில் பணி எப்படி இருந்ததென்பது எனக்குத் தெரியாது. ஆனால் இப்போது அது முழு நேரப் பணியாகிவிட்டதென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உறுப் பினர்களை வந்து பார்க்கக்கூடிய பார்வையாளர்களைக் காணுதல்; சட்ட மன்றத் திற்கு எழுதக்கூடிய கடிதங்கள்; விண்ணப்பங்களை அமைச்சர்களுக்கு அனுப்பு தல்; கேள்விகள் கேட்டல் போன்ற வேலைகளைப் பார்க்க வேண்டியிருக்கிறது. எனவே உறுப்பினராக ஓர் ஐந்தாண்டுக் காலம் அல்லது 6 ஆண்டுக் காலம் இருந்தால், அவருடைய தொழில் பூராவும் போய்விடுகிறது. மறுபடியும் 6 ஆண்டுக் காலம் அல்லது 5 ஆண்டுக் காலம் கழித்துப் போகும்போது, மறுபடி யும் தொழில் பார்க்கும் நிலை ஏற்படுகிறது. சில நேரங்களில் புதிய தொழில் களைத் தொடர வேண்டிய நிலை ஏற்படுகிறது. தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று முறை உறுப்பினராக இருந்துவிட்டால், பிறகு அவர் எந்த வேலைக்கும் லாயக்கில்லை என்ற அளவுக்கு ஆகிவிடுகிறார்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அதற்குத்தான் பென்ஷன் கொடுக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : பென்ஷன் தொகை மிகவும் குறைவாக இருக்கிற தென்று தெரிவித்துக்கொள்கிறேன். சட்ட மன்ற உறுப்பினர்கள் நல்ல முறை யில் பணியாற்ற வேண்டுமென்றால், அதற்குரிய ஊதியத்தைக் கொடுத்தால்தான் அவர்களால் பணியாற்ற முடியும். சுதந்திராக் கட்சியை முதன்முதலில் ஆரம் பித்தபோது, ஒருவர் நம் கட்சியில் சேர விரும்புகிறார் என்று ராஜாஜி அவர் களிடம் சொன்னால், அவருக்கு வேறு வேலை மூலம் ஊதியம் வருகிறதாவென்று கேட்பார்கள். அப்படிக் கேட்பதற்குக் காரணம், வேறு வேலை மூலம் பணம் வந்தால், அதை தன் வாழ்க்கைக்கு வைத்துக்கொண்டு, அரசியலிலே ஈடுபடு வார்களென்பதுதான். ஓரளவுக்கு வசதி படைத்தவர்களால்தான் அரசியலிலே

இருக்க முடியும். வசதியில்லாதவர்கள் அரசியலிலே தாக்குப் பிடிக்க முடியாதென்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சுதந்திராக் கட்சி ஓரளவு வளராமல் போனதற்கு, வசதி படைத்தவர்கள் அதிகம் வராமல், வசதியில்லாதவர்கள் வந்து சேர்ந்தார்கள் என்பதும் ஒரு காரணமாகும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வெளியே பகிரங்கமாகச் சொன்னால், வருகிறவர்கள்கூட வராமல் போய் விடுவார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்த அளவுக்கு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஊதியம் கொடுத்ததைப் பாராட்டுகிறேன். தற்போது கொடுத்திருக்கும் தொலைபேசிக்கான நூறு ரூபாய் மிக முக்கியமான ஒன்று. தொலைபேசி உள்ளவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் இது உண்டென்று சொல்லியிருக்கிறார்கள். தொலைபேசி இல்லாதவர்களுக்குச் சங்கடங்களில்லை. இருக்கிறவர்களுக்குத்தான் சங்கடங்கள் அதிகம். ஏனென்றால், பார்க்க வருகிறவர்கள் பேசுவதுதான் அதிகமாக இருக்கிறது. இன்னொன்று, கண்காணிப்பாக இல்லாவிட்டால், சென்னை போன்ற இடங்களில் மிகவும் கஷ்டம் ஏற்படும். இப்போது எஸ்.டி.டி. கால் என்று வைத்திருக்கிறார்கள். வருகிறவர்கள் அதன்மூலம் வெளியூர்களில் உள்ளவர்களுடன் பேசிவிட்டுப் போய்விடுகிறார்கள். சென்ற காலாண்டில் 2,998 தடவை நான் பேசியதாகப் போட்டு, 892 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நான் அவ்வளவு முறை தொலைபேசியில் பேசவில்லை. என்னிடம் வந்தவர்கள் பம்பாய் போன்ற வெளியூர்களுக்குப் போன் செய்யவில்லை என்றும் என்னால் அறுதியிட்டுக் கூற முடியவில்லை. அப்படிப்பட்ட நிலையில் பல சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நூறு ரூபாய் கொடுக்க வேண்டியது மிக முக்கியம். பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்கின்ற பணிக்குக் குறைவில்லாமல்தான் நாமும் பணியாற்றுகிறோம்.

(பிற்பகல் 4-40)

அடுத்தபடியாக, ரயில்வே பிரயாணத்திற்காகக் கிட்டத்தட்ட பத்தாயிரம் கிலோ மீட்டர் போவதற்கும் சலுகை வழங்கப்படுகின்றார்கள். அதையும் நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

முதலிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 250 ரூபாய் ஊதியம் கொடுத்து, அதற்குப் பிறகு 200 ரூபாய் அலவன்ஸ் என்று கொடுக்கப்பட்டபோது அந்த அலவன்ஸுக்கு வருமான வரி கிடையாதென்று சொல்லப்பட்டது. ஆனால், தற்போது அலவன்ஸ் என்ற பெயரிலே இருந்தாலும் அதற்கு வருமான வரி கட்ட வேண்டுமென்று பெரிய இடத்திலே இருந்து உத்தரவு வந்திருக்கிறது.

இப்போது 100 ரூபாய் ஃபோன் அலவன்ஸ் என்று போட்டிருக்கின்றார்கள். ஒருவேளை அந்த 200 ரூபாயுடன் இந்த 100 ரூபாயையும் சேர்த்து, வருமான வரி கட்ட வேண்டுமோ என்ற ஐயப்பாடு இருக்கின்றது. இந்த 100 ரூபாய்க்கும் வருமான வரி இல்லாமல் செய்ய வேண்டும். மூன்றாவது, பேருந்துகளுக்குக் கொடுக்கக்கூடிய பணத்தைப் பற்றியது. கிட்டத்தட்ட நம்முடைய அரசு 9 லட்சம் ரூபாய் வரையிலே பேருந்துக் கட்டணமாகக் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கணக்குப் பார்க்கின்றபோது ஓர் உறுப்பினருக்கு 1,200 ரூபாய் வருகிறதென்று சொல்லப்படுகிறது. பல உறுப்பினர்கள் இந்த பஸ்களிலே பயணம் செய்வதில்லை. சிலர் பயணம் செய்கின்றார்கள். தற்போது 1,600 ரூபாய் அளவில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் கட்டுகிறோமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 100 ரூபாய் அளவுக்காவது ஒவ்வொரு உறுப்பினரும் பயணம் செய்கின்றார்களா என்று பார்த்தால், இல்லை. அரசுக்குத்தான் இதனால் செலவு ஏற்படுகின்றது. ஆகவே, இவ்வாறு ஓர் உறுப்பினருக்கு 100 ரூபாய்க்குள்தான் ஆகும் நேர்வில் அரசு இவ்வளவு பணம் பேருந்துப் பயணம் நிமித்தம் கொடுப்பதால், உறுப்பினர்களுக்கு எந்தவிதமான லாபமும் இல்லை. உறுப்பினர்களுக்கும் பலன் ஏற்படும், கொடுக்கின்ற பணத்துக்கும் பலன் ஏற்படும் என்கின்ற அளவிலே 100 ரூபாய் ஒவ்வொரு உறுப்பினருக்கும் கொடுத்து அந்தப் பணத்திலிருந்து டிக்கெட் வாங்கலாம் என்ற நிலைமையை ஏற்படுத்தலாம். இப்போது பேருந்திலே செல்வதற்கு 'ஃப்ரீ பாஸ்' என்று கொடுக்கின்றோம். அதற்குப் பதிலாக இவ்வாறு 100 ரூபாய் பணத்தை உறுப்பினர்களுக்குப் பயணச் செலவுக்காகக் கொடுத்து அவர்களுக்கு பஸ்களில் விசேஷ சீட்டுகளும் ஒதுக்கிக் கொடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, உறுப்பினர்களுக்கெல்லாம் ஊதியங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஆனால் நம்முடைய மேலவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் ஊதியம் ஏற்றப்பட்டதாகத் தெரியவில்லை. பத்து, பன்னிரண்டு ஆண்டு காலமாக ஒரே ஊதியத்தில் அவர்கள் இருக்கின்றார்கள். 1920 ஆம் ஆண்டிலேயே அவர்களுக்கு சம்பளம் 500 ரூபாய் என்று சொல்லப்பட்டது. அதே 500 ரூபாய் சம்பளத்தில் துணைத் தலைவர் அவர்களையும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் தற்போது வைத்திருக்கவேண்டிய அவசியம் இல்லை. உறுப்பினர்களுக்கே 500 ரூபாய் சம்பளம் வருகின்றபோது, துணைத் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். யார் சொல்லியும் நான் இதை அவையிலே சொல்லவில்லை. நான் என்னுடைய சொந்த அபிப்பிராயத்தைத்தான் சொல்லிக் கொள்ளுகின்றேன்.

1975 அக்டோபர் 28]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நான் சொல்லவில்லை. (பலத்த சிரிப்பு).

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஃபோன் வசதிக்காக 100 ரூபாய் அளிப்பதை ரொம்ப சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளுகின்றேன். அடுத்தபடியாக, இந்த ரயில் பிரயாணக் கூப்பன் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இதுவரையிலும் இன்று வரும், நாளை வரும் என்று எதிர்பார்த்து வரவில்லை. அதற்கும் சட்டம் இயற்றினால்தான் நல்லது என்று தெரிகிறது. இன்னும் காலதாமதப்படாமல் வருமா என்று தெரியவில்லை. ஏனென்றால் பதவிக் காலம் இன்னும் நான்கு மாதங்கள்தான் இருக்கின்றன. எங்களுக்கு இன்னும் நிறைய இருக்கின்றது. நான் அவர்களைப்பற்றித்தான், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைப்பற்றித்தான் சொல்கிறேன். அடுத்த தேர்தலுக்கு இன்னும் நான்கு மாதங்கள்தான் இருக்கின்றன. அதற்குமுன் கிடைக்குமா என்பது தெரியவில்லை. எங்களுக்கு இந்த பஸ் பாஸ்' உதவியாகத்தான் இருக்கிறது.

திரு. சுவாமிநாதன் அவர்கள் அரசியலைப்பற்றிச் சொன்னார்கள். அது மிகவும் சரி. ஒரு தொழிலுக்கும் லாயக்கு இல்லாதவன்தான் அரசியல்வாதி ஆகிவிடுகின்றான். அவன் எந்த வாதி என்பது எனக்குப் புரியவில்லை. வாதியா பிரதிவாதியா என்று தெரியவில்லை. ஹாஸ்டலைப் பொறுத்தவரைக்கும் இப்போது நல்ல வசதியாக இருக்கிறது. இரண்டு பையன்களைத்தான் வைத்திருக்கிறோம். மிகவும் சௌகரியமாக இருக்கிறது. லைட் இவ்வளவுதான் எரிக்க வேண்டும், வாட்டர் இவ்வளவுதான் உபயோகிக்க வேண்டுமென்று இருக்கிறது. மொத்தத்தில் இப்போது ரொம்ப சௌகரியம் இருக்கிறது. ஆனால் சுகாதார நிலைமைதான் சரியில்லை. சுகாதார நிலைமையை நல்ல முறையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இத்தருணத்தில் கேட்டுக்கொள்ளுகின்றேன். இப்போது வாடகை 60 ரூபாய் என்கின்றார்கள். இலவசமாக இருந்தால் நல்லதாக இருக்கும். அவ்வாறு இலவசமாகக் கொடுக்காமலிருந்தால், மற்ற மாநிலங்களில் ஒரு சிறிதளவு வாடகை வசூலிப்பதுபோல இங்கேயும் இருந்தால் நல்லதென்று சொல்லி முடித்துக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணைத் தலைவர் அவர்களே, இது பொதுவாகவே மன்ற உறுப்பினர்கள் எல்லாம் வரவேற்கின்ற ஒரு மசோதா. இந்த அரசைப் பொறுத்தவரையில், சட்டமன்றப் பணிகளிலே ஈடுபட்டிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வசதிகள் தேவையான அளவுக்குச் செய்து கொடுக்க முடியாவிட்டாலும், போதுமான அளவுக்கு நம்மாலே முடிந்தவரை

செய்து கொடுத்திருக்கிறோம் என்பதை அரசு எடுத்திருக்கும் முடிவிலிருந்து அறியலாம். மக்களுக்காகப் பாடுபடுகின்றவர்களுக்கு எந்த அளவுக்கு வசதி வாய்ப்புக்கள் பெருகுகின்றதோ அந்த அளவுக்கு அதன்மூலம் மக்களுக்கு நன்மை கிடைக்குமென்ற நம்பிக்கையை இந்த அரசு கொண்டு, அதற்காக தக்க முயற்சி எடுத்து வருகிறோம். ஒவ்வொரு ஆண்டும் சட்டமன்றத்தைப்பற்றி விவாதம் நடைபெறும்போது, தெரிவிக்கப்படும் கருத்துக்களை ஆராய்ந்து தக்க முடிவுகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பஸ்களைப்பற்றிச் சொன்னார்கள். இப்போது இருக்கின்ற உரிமையானது எப்போது வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும் போகலாம் என்றிருக்கிறது. அதற்காக 100 ரூபாய் கொடுத்தால், தற்போது இருக்கும் இந்த உரிமை தடைபடும். ஆனால் எல்லோரும் அதை விரும்பினால், ஏற்றுக்கொள்ள அரசுக்கு ஆட்சேபணை இல்லை. வருமான வரியைப்பற்றிச் சொன்னார்கள். இப்போது புதிதாக அவர்கள் கொடுக்கின்ற விளக்கம், அரசாங்கத்தின் சார்பிலே வீடுகள் இருந்தாலும், அந்த வீடுகளில் மேஜை போன்ற மற்றும் ஃபர்னிச்சர் இருந்தால் அவைகளுக்கும் 'அமனிட்டீஸ்' என்ற அளவிலே வரியை வைத்திருக்கிறார்கள். அங்கே, பாராளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு என்ன என்ன செய்திருக்கின்றார்களோ, அதைப்போலவே நம்முடைய உறுப்பினர்களுக்கும் செய்ய வேண்டுமென்பதுதான் நம்முடைய எண்ணமாகும். ஏற்கெனவே இருந்த சம்பளத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த அரசு வந்ததற்குப் பின்புதான் உறுப்பினர்களுக்கு அதிகமாகச் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. மேலவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் சம்பளம் குறைவாக இருக்கிறதென்று எடுத்துச் சொன்னார்கள். உறுப்பினர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தை அதிகப்படுத்தியிருப்பதனால்தான் அந்த வித்தியாசம் குறைவாகத் தெரிகிறது. அதுபற்றியும் அரசாங்கம் தனியாகப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

1975 அக்டோபர் 28]

பிரிவுகள் 2 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1975) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1975) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நிகழ்ச்சி நிரலில் உள்ள மற்ற விஷயங்கள் நாளை எடுத்துக்கொள்ளப்படும். இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 4.50)

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

221. Notification issued with G.O. Ms. No. 313, Co-operation, dated 14th July 1975, in regard to an amendment to the Tamil Nadu Pawn Brokers Rules, 1944. [Laid on the table of the House under section 22 (4) of the Tamil Nadu Pawn Broekrs Act, 1949 Tamil Nadu Act XXIII of 1943).]